Sivan was also actively connected with many amateur dramatic societies As a Tamil composer and a musician, he was much in demand for music-direction. At Tiruvarur he composed the songs for the drama *Yayati* for the Sri Vilasa Sabha. At Tirutturaippundi, he composed the songs and directed the plays *Usha*, *Manoharan*, and *Markandeya* for the Sri Krishna Vilasa Sabha. At Papanasam he had prepared and directed the songs of about 15 dramas for the Bharata Ranjani Sabha, dramas like *Sakuntalam*, *Uttara Rama Charitam*, and *Subhadraparinayam*. Both at Papanasam and at Tirutturaippundi he had himself played the role of *Markandeya* to which character he was well suited.

Owing to his intimate association with our family, at Tiruvarur, our association with and interest in him continued and it may not be known outside that, in the early thirties when I had some literary connections with Tamil Talkies which had just then begun to be taken, I introduced him to the Films and their music composition, so that whatever music was composed for the pictures might possess the dignity and standard of good classical Carnatic music Sivan's career as a composer for Films, as also as an actor, is too well-known.

Whether he wrote for films or composed out of his own moods of devotion, he always maintained his standard of music and the simple, dignified and devout diction of his *Sahitya*. He is the foremost contemporary composer whose songs have, in his own time, become justly

popular and are being sung by all musicians in their concerts. The stalwarts of those times like Tiruppazhanam Panchapagesa Sastrigal and Muthia Bhagavatar developed regard and admiration for Sivan as a composer. His compositions, leaving out what he wrote for the films, number over 2500 and in these, he has handled over 73 Ragas. Several collections of his songs have also been brought out in print with notation, the latest volume to be released being one carrying his *Ramachaitra kirtanas*.

For some time Sivan was also on the Staff of the Theosophical High School, Adyar, and connected also with the work of the Kalakshetra. An important achievement which gave Sivan great personal solace and satisfaction is his building a Siva temple at his birth-place Polaham and performing its Kumbhabhishekam.

Sivan had received his due recognition from established bodies, voluntary organisations and *ad hoc* celebration committees. H. H. Sri Sankaracharya of Kanchi Komakoti Peetha blessed him with a title. He was elected Fellow of the Sangeet Natak Akademi (1965) and given an award by the Tamil Nadu Sangeeta Nataka Sangham. He presided over the conferences of the Tamil Isai Sangam (1966) and the Fine Arts Society (1950, 1970). He was one of the earliest to receive the Certificate of Merit from the Music Academy and subsequently too he had been honoured at the Experts' Committee of the Academy more than once. His selection as President of the 45th Annual Conference of the Music Academy completes the series of distinctions which have been bestowed on him in recognition of his position as an outstanding contemporary musician-composer.

ஸ்ரீ பாபநாசம் சிவன் ஸாஹித்யங்கள்

(ஸ்வரஸாஹித்யங்களுடன்)

1. கீர்த்தனமாலை — 3-ஆம் பாகம் — ரூ. 8. 00

2. ஸ்ரீராம சரித கீதம் 24 ராகங்களில்

அமைந்த ராகமாலிகை ரூ. 2. 00



It's several years since Shekhar changed to toothpastes from coal-powder. But several months later there was a cause for a pause. Shekhar asked himself. "What's wrong? I have tried almost all brands, but they don't seem to get me anywhere–better teeth or brighter smiles. Why?"

Then he knew. An accurately and scientifically designed toothbrush is necessary to ensure that the toothpaste does its job thoroughly.

That's how he discovered **Dr West's** toothbrush. Even the best toothpaste, by itself, will not do. You must also have a toothbrush made for the sole purpose of correctly brushing your teeth.

Remember to buy only

Dr. West's

TOOTHBRUSH

Choice of six transparent colours.

Also available Dr. West's child size brushes

Our Affiliated Institutions

1. ALAPANA, MADRAS
2. BRAHMA GANA SABHA, MADRAS
3. NADOPASANA, MADRAS
4. NARADA GANA SABHA, MADRAS
5. NARADA GANA SABHA, KARUR
6. SRI THYAGA BRAHMA SABHA, NEW DELHI
7. SRI KRISHNA GANA SABHA, MADRAS

THE TEACHERS' COLLEGE OF MUSIC

MUSIC ACADEMY, MADRAS

Principal & Professor of Vocal Music—Sangita Kalanidhi Mudicondan C. Venkatarama Iyer

Special Vocal Teacher—Smt. T. Mukta

Lecturer in Theory and Pedagogy—Vidwan P. Ramachandriah

Model Class Teachers—Vidwan B. Krishnamurthi & Vidushi R. Vedavalli

Correspondent—Dr. V. Raghavan.

Instruction is imparted here to pupils not only in theory and practice of Indian Music, but also in the correct and approved method of teaching music. The trained pupils will be competent to teach upto the School Final Class. There are four qualified teachers for Practical Music, Theory and Pedagogy and the Model Class

The Training class is of the duration of one year, three terms, and for the present, is confined to **Vocal Music**. The working hours of the College are between 11 A.M. and 4 P.M.

The fee for the whole course is Rs. 50 if paid in advance—or Rs. 6 for each of the nine months comprising the whole course.

Scholarships and fee concessions are available. At the end of the course an examination will be held and diplomas awarded to successful candidates The first in rank will also get the Rajah Annamalai Prize.

There is also a special prize for the student who passes first in *Theory*. This prize has been endowed by Mrs. R. N. Sarma in the name of her late husband.

Persons of both sexes are eligible for admission. Only those candidates whose proficiency in music is upto the Intermediate standard of the Madras University are ordinarily admitted. Preference is however given to those who are already employed as music teachers. Applications for admission shall be in the prescribed form. The final selection of candidates for admission will be made by a Committee before whom the candidates shall present themselves on such days as may be notified.

Prospectus, syllabus and admission forms will be sent on receipt of postage stamp for the value of 25 P.

CLASSICAL BHARATA NATYA SCHOOL is also separately conducted by Smt. Balasarasvati under the auspices of the Academy.

The Correspondent, The Teachers' College of Music

THE MUSIC ACADEMY

Royapettah – Madras-14

VEENA SUBBANNA

Vidvan N. Chennakesavaiah, Bangalore

It is rare indeed to see an accomplished musician who is also a patron of the art. In Vainikapravina Veena Bakshi Subbanna we had this rare combination. Born in a family of vainikas with a silver spoon in his mouth he shone not only as one of the great Vainikas of the day, but also gave lavishly to musicians, rich and poor, from far and near.

Subbanna's grandfather Veena Venkatasubbaiah was another rare combination. He was not only a celebrated Vainika of his days, but also an intimate friend of Maharaja Sri Krishnaraja Wadiyar III, and an astute man and a political power in the Mysore Court. The Maharaja bestowed on him six Inam Villages. In addition, he had accumulated a considerable fortune in jewellery, gold and precious stones. He had constructed a temple near the Doddakere tank in Mysore, where the idols of Siva and Maruthi were installed, and a choultry at the Pashchimavahini. His adopted son was Dodda Seshanna, also a celebrated Vainika and the *Guru* of the famous Seshanna. His son was Subbanna. He thus inherited a large fortune.

Subbanna had his early musical training under his father along with Seshanna and also from Mysore Sadashiva Rao. With his antecedents Subbanna became an Asthana Vidwan early in life as a matter of course. For quite a number of years he and Veena Seshanna gave Veena Duet performances all over the country. On one occasion when they had to perform before the Raja of Tanjore it was suggested to these two that the local Court Vidwan Krishna Bhagavathar, who had earned for himself the name of Kalyani Krishna Bhagavathar, had so excelled in the presentation of Kalyani that these two Vidwans had better omit that raga from their programme before the Raja, there being no hope of their making an impression with it. The two Vidwans took it up as a challenge and together incessantly practised Kalyani for eight to ten days and presented it before the Raja as the major item of their programme. The Raja was quite pleased and seems to have remarked that he was wrong in thinking that the standard of Kalyani then established in his Court could not be excelled. As time went on Seshanna keen on making both a name for himself and earning money, began to travel widely and gave concerts by himself. When Seshanna was questioned by an intimate friend what he thought of Subbanna's merits as a Vainika, he is said to have remarked, "I have no doubt now made a better name as a Vainika than Subbanna,

but actually he is the better Vainika. Only being a *garbha-sriman* he has no need to bother about maintaining a high professional standard by incessant practice, as a poor man like me has to."

He was a classmate and friend of Maharaja Sri Chamaraja Wadiyar who in matters musical always used to consult Subbanna. He was also touring with the Maharaja. He used his influence to introduce several eminent Vidwans of the day to the Mysore Palace, the principal among whom was Tirukkodikaval Krishna Iyer, the celebrated Violinist. The musicians who visited Mysore received presents and money not only from the Maharaja, but also from Subbanna. On one occasion when Maha Vaidyanatha Iyer sang in Mysore, Subbanna greatly pleased, got up, removed from his finger a valuable emerald ring and presented it to the musician. Maha Vaidyanatha Iyer was immensely pleased at this recognition. On another occasion, when Ramnad Srinivasa Iyengar was singing in Subbanna's house, he lost a ring which he was wearing, which must have slipped in the free play of his hands while he was singing. Immediately after the *kacheri* he discovered his loss and was downcast. Ascertaining the reason Subbanna went inside, brought a jewel box full of valuable rings set with precious stones and asked Srinivasa Iyengar to take whichever ring he liked best. He had a standing account with lace and silk merchants and his house had always a good stock of presentation articles such as laced shawls, dhotis and vallis. Subbanna was no less generous to his students and other practitioners of the art. Asthana Vidwan Chikkarama Rao used to recall till his last days how his Guru Subbanna not only taught him music, but fed him sumptuously in his house and also took him to Madras and other places to enable him to hear the famous musicians of the day and cultivate a proper style. He gave so freely and lavishly that he was reduced to poverty himself. His one regret of his last days was that he could not reward merit as he used to.

On one occasion, Veena Seshanna had somehow incurred the displeasure of Maharaja Sri Chamaraja Wadiyar and at the time was also in financial difficulties. Subbanna wanted to rehabilitate him in the Palace. He asked him to compose something good in praise of the Maharaja and give it to him. Seshanna composed the famous Senjuruti Tillana, 'Dhiranna thanna Dheentha Dhirana'. Subbanna took it to the Maharaja and said that he had a composition of rare beauty which he would present if a reward of Rs. 4,000/- was promised to the Composer. The Maharaja said that if Subbanna testified to its excellence it must be good and promised the reward. Subbanna then presented the Tillana before the Maharaja, who was very pleased with it and asked who the Composer was. Subbanna said it was Seshanna. Seshanna immediately got back into Palace favour.

18

Subbanna was also a Composer. He has composed Swarajathis in Kambhoji, Karnataka Kapi and Keeravani, Varnas in Athana and Poorva Kalyani, Keertanas in Dharmavathi, Dhenuka and Rishabhapriya and some Tillanas and Javalis. He trained a number of disciples among whom may be mentioned Asthana Vidwans Chikkarama Rao, Belakavadi Sreenivasa Iyengar, R. S. Keshava Murthy and Swaramurthy V. N. Rao and V. Sreekantaiyer.

After a full life of 82 years he left this world on the 13th July 1939, content and peaceful, after hearing his disciple Chikkarama Rao sing Tyagaraja's famous Ahiri Keerthana 'Ādaya Sri Raghuvara'.

ஸங்கீதம் அன்றும் இன்றும்

ஸங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கடராமய்யர்

குருகுலவாஸம், போதனை:

ஸங்கீதம் அன்று இருந்த நிலைமையைப் பற்றியும், பிறகு இருந்த நிலைமையைப் பற்றியும் இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பற்றியும் மூன்று காலப்பிரிவுகளாகச் செய்து என்னுடைய அனுபவத்தைக் கொண்டு எனக்குத் தெரிந்தவரை சிறிது சொல்கிறேன். முதல் காலப்பிரிவு என்பது 1920க்கு முன்பு இருந்த ஸங்கீதத்தைப் பற்றியதாகும். இரண்டாவது கால வகுப்பு 1920 முதல் 1960 வரை, மூன்றாவது கால வகுப்பு 1960லிருந்து இன்று வரை வைத்துக்கொண்டு சொல்லப்போகிறேன். இந்த விஷயத்தை மிக ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஏனென்றால் இப்பொழுது சங்கீதத்தின் தரம் அதிக விருத்தியாகி இருப்பதாக நினைப்பவர்கள் இருக்கக்கூடும். அல்ல, முன்புதான் தரம் விசேஷமாக இருந்தது என்று நினைப்பவர்களும் உளர். இதைப்பற்றி பேசுவதில் தர்ம ஸங்கடம் உண்டு. 1920க்கு முன்பு இருந்த ஸங்கீதத்தைக் கேட்டவர்கள் இப்பொழுது வெகு வெகுச் சிலரே இருக்கிறார்கள். ஆயிரத்துக்கு ஒருவரோ இருக்கலாம் இப்பொழுது.

ஏற்கனவே சங்கீத அப்பியாசம் பண்ணுவதாக இருந்தால் சிறுவயதிலேயே, பிறவி ஞானமும் விட்டகுறை தொட்டகுறை உள்ளவர்களும் ஜன்மாந்தர வாஸனை உள்ளவர்களும், த்யாகராஜ ஸ்வாமி பாடியபடி "ஸங்கீத ஞானமு தாத வ்ராயலெரா" என்கிறபடி வித்தையைச் சொல்லிக்கொள்ளும் சிஷ்யன், திறமையான வித்வானாக ஆகவேண்டும் என்று தலையில் எழுதப்பட்ட பிள்ளைகளே இந்த வித்தையை அப்பியாசம் பண்ண முயற்சிக்க வேண்டுமென்று விதவான்கள் எண்ணுவார்கள். அதன்படி சுமார் 8–10 வயதிலேயே கேள்வியினாலேயே ராகங்களும் கீர்த்தனங்களும் பாடத்தெரிந்த பிள்ளைகளையே சிஷ்யனாக வைத்துக் கொள்வார்கள். முதலாவது குருவுக்கு நல்ல சிஷ்யன் அமைவதும், சிஷ்யனுக்கு நல்ல குரு அமைவதும் பொதுவாக துர்லபம். இப்படி நன்மையாக அமைந்தால் மாத்திரமே வித்தை வருவது ஸாத்யமாகும். விசேஷமாக நான் மேலே சொல்லிய இந்த மூன்று கால வகுப்புகளிலும் நன்றாய்ப் பாடி பிரஸித்தமாக இருந்த, இருக்கிற வித்வான்கள் அதிபாலயத்திலேயே ஸங்கீதம் ரத்தத்திலேயே ஊறி வந்தவர்கள். Musicians are born and not made என்று சொல்லுவார்கள்.

குருவானவர் சிஷ்யனை இவன் அர்ஹன், அல்லது அனர்ஹன் என்று சில மாதங்கள் கூட வைத்துக்கொண்டு கவனிப்பார்கள். அனர்ஹனாக இருந்தால் "உனக்கு ஸங்கீதம் வராது போய்வா" என்று அனுப்பி விடுவார்கள். இதையும் மீறி சிஷ்யன் விடாப்பிடியாய் இருந்தால் சுச்ருஷைக்காக வைத்துக் கொள்ளுவார்கள். இந்த சிஷ்யன் சில வருஷங்கள் அந்த வித்வானிடம் இருந்து பிறகு, மேதையாகப்படாவிடினும், அந்த பெரிய வித்வானின் சிஷ்யர் என்று சொல்லிக்கொள்ளுவார். இந்தப் பட்டியலிலும் சிலபேர் உளர். முன்பும் இருந்ததுண்டு. பிறவி ஞானம் இருந்து முன் சொல்லிய பிராப்தங்கள் இருந்து, வித்தையை அப்பியாசம்

செய்யும் போது சாரீரம் அசௌகரியம் ஆகி வித்யாப்யாசத்தை நிறுத்தும்படியாக நேரலாம். எல்லாம் ஒற்றுமையாக இருந்து சிஷ்யனுக்கு வியாபகம் உண்டாகி பேரும் புகழுமாக வந்தாலும் தீர்க்காயுளும் இருந்தால் தான் இந்த வித்தையில் நீடித்த காலம் புகழுடன் விளங்கலாம். சிஷ்யன் நல்ல குணவானாகவும் பணிவுடனும், தன்னடக்கத்துடனும இருக்கிறானா என்று குருமார்கள் கவனிப்பார்கள். அப்படி இருப்பதாகத் தோன்றினால் தான் சிஷ்யனை ஏற்றுக் கொள்வார்கள். சிஷ்யனானவன் மேல் கீழ் என்று பார்க்காமல் குருவுக்கு வேண்டிய சுச்ருஷையை செய்து வர வேண்டும். அந்த குருவும் இப்படி சுச்ருஷை செய்தவர் தான். இப்படியே தலைமுறை தலைமுறையாக வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட சிஷ்யனை குருவானவர் தன் பிள்ளைக்கு மேலாக நினைத்து நடத்துவார் நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். நானே அனுபவித்துமிருக்கிறேன். முன்பு சிஷ்யர்கள் பிக்ஷை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு பாட்டு சொல்லிக் கொள்ளுவார்கள். சில குருமார்கள் தன் வீட்டோடு வைத்துக் கொண்டும் சாப்பாடு போட்டுச் சொல்லிக் கொடுப்பார்கள்.

முன் தலைமுறையில் இருந்த வித்வான்கள் சிஷ்யர்களுக்கு அதிகமாக சொல்லிக் கொடுப்பதில்லை என்று சிலர் அவதூறு கூறலாம். ஆனால் என்னுடைய அனுபவத்தில் நான் அதை மறுக்கிறேன். அவர்கள் ஒரு நாள் சொல்லிக் கொடுத்தாலும் அது ஜரிப்பதற்கு ஒரு மாத காலமாகலாம். சில சமயங்களில் நான்கு தினங்கள் சேர்ந்தாற் போல் சொல்லிக் கொடுப்பார்கள். பிறகு நான்கைந்து தினங்களுக்கு ஒரு முறை யோதிப்பார்கள். பிறகு ஒரு மாதம் இல்லாமலும் இருக்கலாம். இப்படித்தான் அனுபவத்தில் இருந்தது. குருவானவர் தெருவில் நடந்து போகும் போதோ, சாப்பாடு ஆனபிற்பாடோ, பாதி நிசியிலோ, எப்பொழுது அவர்களுக்கு உத்ஸாகம் உண்டாகிறதோ அப்பொழுது தம்மை இழுத்து வைத்து உட்கார்த்தி சொல்லிக் கொடுப்பார்கள், தன் மனதிற்கு எவ்வெப்பொழுது என்ன மனோதர்மம் தோன்றுகிறதோ அதை அவ்வப்பொழுது சிஷ்யனைக் கூப்பிட்டுச் சொல்வதும் உண்டு ஒன்று அல்லது இரண்டு சிஷ்யனுக்குத்தான் சொல்லிக் கொடுப்பார்கள். சிஷ்யன் குசாக்ர புத்தியுடையவனாகை இருந்தால் குரு பாடியவைகளைக் கேட்டுக் கேட்டே வித்வானாகி விடுவான். சொல்லிக் கொண்டு ஓரளவும், கேட்டு ஓரளவும், ஸ்வய அப்யாசத்தினால் ஓரளவும், பிறருக்குச் சொல்லிக் கொடுத்து ஓரளவும் சேர்ந்து வித்தை பூர்த்தியாகும். ஆகையினால் அதி புத்திசாலியான சிஷ்யன் கூட இருந்து வந்தாலே மேல் சொல்லிய நாலு முறைகளின் மூலம் வித்தை பூர்த்தியாகி வித்வானாகி விடுவான்.

இந்த காலத்திலோ, தற்பொழுது ஆண்பிள்ளைகள் ஸங்கீதம் கற்றுக் கொள்வதோ, சிஷ்யனாக வருவதோ அரிதாகிக் கொண்டு வருகிறது. அப்படியே கற்றுக் கொள்ள வந்தாலும் இந்த வித்யைக்குத் தகுந்த அதிபுத்திசாலித்தனத்தோடு காண்பது அரிதாக இருக்கிறது. முன் தலைமுறையில் வீட்டுக்கு வீடு ஆர்மோனியப் பெட்டியை வைத்துக் கொண்டு பெண் குழந்தைகள் ஸங்கீதம் கற்றுக் கொண்டார்கள். அடுத்த தலைமுறையில் வீட்டுக்கு வீடு பிடில் வாத்யத்தைக் கற்றுக் கொண்டார்கள். இந்த தலைமுறையில் வீணை கற்றுக் கொள்கிறார்கள். அதே போல் வாய்ப்பாட்டும் சொல்லிக் கொள்கிறார்கள். முன் தலைமுறையைவிட இப்பொழுது ஸங்கீதம் அப்பியாசம் செய்கிறவர்கள் தொகை கணக்கில் அகப்

படாது ஆசைக்கு ஸங்கீதம் தெரிந்து கொள்ளவேண்டும் என்று கற்றுக் கொண்டாலும் பெரும்பாலோர் மேடைக் கச்சேரி செய்யவேண்டும் என்றே ஸங்கீதம் கற்றுக் கொள்கிறார்கள் என நான் எண்ணுகிறேன். இப்பொழுது கற்றுக் கொள்கிறவர்கள் அவ்வளவு பேரும் மேடைக் கச்சேரி செய்தால் கேட்பதற்கு ரஸிகர்களைத் தேடவேண்டுமல்லவா? வீட்டுக்கு வீடு தனியாக அப்யாசம் செய்வது தவிர ஸங்கீத பள்ளிக்கூடங்கள், காலேஜ்கள், முதலியவைகளிலும் பெரும்பாலோர் வித்தையைக் கற்றுக் கொள்கிறார்கள். 10—20 பேர்களை வைத்துச் சேர்ந்தாற் போல் சொல்லிக் கொடுப்பதில் யாருக்கு எந்தெந்த ஸங்கதிகள் சரியாக வந்திருக்கிறது என்று கண்டு பிடிக்கவும், சாரீரத்தில் ஒவ்வொருவரும் எப்படி கொடுத்து வாங்குகிறார்கள் என்பதைக் கண்டு அறியவும் கஷ்ட ஸாத்யமாகிவிடும். இந்த வித்தையோ உபதேசம் மாதிரி தனித்தனியே அப்யாசம் செய்யவேண்டிய வித்தையாகும். அப்படித் தனியே கற்றுக் கொண்டாலும் வித்தை வருவது கஷ்ட ஸாத்யமாக இருக்க, பலர் ஏககாலத்தில் ஒன்று சேர்ந்து கற்றுக் கொண்டால் அவரவர்களுக்கு வித்தை எந்த மட்டில் வந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ள வேண்டியது தான்.

முன் காலத்தில் ஸங்கீதம் சொல்லிக் கொடுப்பதென்றால் த்வனி சரியாகக் கொடுக்கும்படி சாரீரத்தையும் சீர்படுத்துவார்கள். ஆசான் எப்படியோ அப்படியே தான் சிஷ்யனுக்கும் வரும். வாயை வைத்துக் கொள்ளும் விதமும், மூடித்திறக்கும் விதமும் சொல்லிக் கொடுப்பதுடன், தவடை ஸாதகம், அஜ ஸாதகம், மண்டூக ஸாதகம், அச்வ ஸாதகம் இவைகளை சீர்திருத்தி விலக்கி விடுவார்கள்.

முன்பு ஸங்கீதம் கற்றுக் கொள்வதில் லக்ஷ்ய லக்ஷணம் என்ற முறை இருந்தது. லக்ஷ்யத்திற்கு ப்ராதான்யம் கொடுத்து, லக்ஷ்யத்தை அனுஸரித்தே லக்ஷணத்தைச் சொல்லிக் கொடுத்தார்கள். 'பைரவியில் இந்த ஸங்கதியைப் பிடிக்காதே, அதில் காஹரப்ரியா ஜாடை அடிக்கிறது'; ஒரு குறிப்பிட்ட ராகத்தில், 'அந்த ஸ்வரத்தைப் பிடிக்காதே, அது அஸம்ப்ரதாயம்' என்று இப்படியெல்லாம் லக்ஷணம் சொல்லிக் கொடுப்பார்கள். இப்பொழுது லக்ஷணமோ பரிபாஷைகளாக அடங்கிய நிகண்டுவாக இருக்கிறது. ஸங்கீத புத்தகங்களில் இந்த பரிபாஷைகளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஸங்கீதத்திற்கு பரீக்ஷை என்று வைத்து லக்ஷ்யத்திற்கு குறைவான அவகாசமும் லக்ஷணம் எழுதுவதற்கு அதிக அவகாசமும் வைத்து நடத்து வருவதாக அறிகிறோம். அது தலைகீழாக 'லக்ஷண லக்ஷியம்' என்று சொல்லும்படியான காலமாக வந்து விட்டது. இப்படி இருந்தால் லக்ஷியம் எப்படி விருத்தியாகும்?

வ்யாபகம் :

ஸங்கீதம் அப்பியாசம் செய்து நன்றாகப் பாட வந்தபின், குருவே சில இடங்களில் சிபார்சு செய்வதும் முன்பு உண்டு. இப்பொழுதும் அந்த மாதிரி உண்டு. முன்பு ஊருக்கு ஊர் பாடி அலைந்து திரிந்து பாட்டு ஆங்காங்கு நன்றாக அபாரமாக அமைந்தால் பேரும் புகழும் உண்டாகும். பாட்டில் ஏதேனும் குறை இருந்தால் அப்பாட்டு என்றைக்குமே முன்னுக்கு வராது. முன்னுக்கு வர ரசிகர்கள் விடவும் மாட்டார்கள். ஒருவருக்கொருவர் ஆங்காங்கு சொல்லித்தான் ஜனங்களுக்குத் தெரியவரும். நெடுக வ்யாபகம் உண்டாவது என்பது அப்பொழுது அவ்வளவு சிரமமானது. இக்காலத்திலோ அன்பர்கள், ஆதரிப்பவர்

கள், தினப்பத்திரிகைகள், வாரப்பத்திரிகைகள் மூலம் சுமாரமாக இருக்கிற பாட்டும் வியாபகத்துக்கு வரக்கூடும் 'பாட்டு தேவலை, நன்றாக இருக்கிறது, பேஷாய் பாடுகிறார். உயர்ந்த பாட்டு, பெரிய ஞானம் உள்ள பாட்டு, அபார பாட்டு இப்படி எல்லாம் முன்பு தரவாரியாகச் சொல்லுவார்கள். இப்பொழுது இப்படி எல்லாம் தரம் பிரிப்பதாகத் தெரியவில்லை. முன் காலத்தைவிட இந்தக் காலத்தில் வ்யாபகம் பண்ணுவது என்பது ரொம்ப சுலபம் என்று எனக்குத் தோன்றுகிறது. வ்யாபகம் ஏற்பட முன்னைவிட இப்பொழுது வசதிகள் அதிகம் இருக்கிறது.

வித்வானின் தன்மைச் சிறப்பு:

வித்வான்கள் ஸரளிகளாகவும் தன்னடக்கமுள்ளவர்களாகவும் வித்தைக்கு பயந்து கொண்டும் வித்தையை இன்னம் தேடிக்கொண்டும் இருப்பார்கள். வித்வான்கள் பிரபுக்கள் மாதிரி தோன்ற மாட்டார்கள். வித்வான்களாகவே இருப்பார்கள். இப்பொழுதும் சிலர் அப்படி இருக்கிறார்கள் உன்பது உண்மை. வித்வான்கள் ஸதஸில் தெய்வம் இருக்கிறது என நினைத்து வித்தைக்கு பயந்து. பாடுவார்கள். தான் ஆராச்சி பண்ணியோ, பிறரைக் கேட்டுத் தெரிந்து கொண்டோ தவறில்லாமல் பாட முயற்சிப்பார்கள். தற்காலம் லக்ஷணத்தை அனுசரித்த லக்ஷியத்தை விட காதிற்கு ச்ராவ்யத்தை பெருமிதமாக நினைத்து எல்லோரும் பாடுவதாக நினைக்கிறேன். சாஸ்திர விரோதமாக இருந்தாலும் காதிற்கு இனிமை இருக்கிறது என்று நினைத்து பாடுவதே தற்காலப் போக்காக இருக்கிறது. முன்பு வித்தையையே முதலாவதாக எண்ணி சம்பாத்தியத்தை இரண்டாவதாக வைத்துக் கொண்டார்கள். வித்தைக்கு கௌரவம் கொடுத்தார்கள். முன்பு வித்வான்களைப் பார்ப்பதற்கு ஒரு கூட்டமும் கச்சேரிக்கு வரும்போது ஒரு கூட்டமும் கூட வந்து உட்காரும். 'வருகிறாரா, வந்து விட்டாரா' என்று இப்படி எல்லாம் ஜனங்கள் மிகுந்த அவாவுடன் இருப்பார்கள். தற்காலத்தைக் காட்டிலும் முன்பு வித்வான்களுக்கு மதிப்பு அதிகம்.

ஸங்கீதத்தின் தரம், கச்சேரி பந்தா:

பொதுவாக முன்பு வித்வான்கள் 5, 6 உருப்படிகளைத்தான் கச்சேரிகளில் பாடுவார்கள். கச்சேரியின் பிரதான அம்சம் ராகம், தானம், பல்லவி, நிரவல், ஸ்வரம் இவைகள் தான். தற்பொழுது அந்த அம்சங்கள் குறைந்து உருப்படிகள் அதிகம் பாடப்படுகின்றன. விசேஷமாக உருப்படிகளிலும் ராகம், நிரவல், ஸ்வரம் எல்லாம் முன்பு பாடுவார்கள்

முன்பு மனோதர்மம் ஒன்றேதான் லக்ஷியம். 1920க்கு முன்பு முழுவதும் மனோதர்ம ஸங்கீதமாகவே இருந்தது எனலாம். வர வர அவ்வளவு மனோதர்மத்துக்கு இடம் கொடுக்காமல் உருப்படி வகைகளுக்கு அதிக இடம் தரப்படுகிறது ஏற்கனவே ராக விஸ்தாரம் அதிகமாக உண்டு. ராகம் பாட எடுப்பார்கள். மனோதர்மம் பூராவும் செலவழிந்து ராகத்தை அவர்களாக முடித்தால் தான் உண்டு. இதனால் தான், 3 நிமிடம் 4 நிமிடத்திற்குள் மூச்சுவிடவே அவகாசம் போதாதே, 3,4, நிமிஷங்களில் என்ன பாடுவது, என்று நினைத்து 'கிராமபோன் ரிகார்ட்'களை அவர்கள் கொடுக்கவில்லை. இதைக் கொண்டு அவர்களுடைய மனோதர்மம் எத்தகையது என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம். இத்த

பத்ததியை இன்னும் ஹிந்துஸ்தானி வித்வான்கள் கையாளுகிறார்கள். இந்த மனோதர்மத்தையே ஆதாரமாகக் கொண்டு 1920-க்குப் பின் பாடியவர்களும் உண்டு. தற்பொழுதும் இந்தக் கொள்கையை அனுசரித்து பாடுபவர்களும் வெகு சிலர் இருக்கிறார்கள். கச்சேரிக்கு எவ்வளவு மணி நேரம் என்பது முன்பு கிடையாது. சில சமயங்களில் 5 மணி நேரம் கச்சேரி நடக்கும். இப்பொழுது ஸங்கீதக் கச்சேரிக்கு கால அளவு கட்டுப்பாட்டினால் ஸங்கீத வளர்ச்சி குறையுமென்று நான் ஸந்தேகப்படுகிறேன். 1000 கீர்த்தனங்கள் பாடத் தெரியும் என்று ஒருவர் சொன்னால் அவரைப் பெரிய வித்வான் என்று முன்பு நினைக்கமாட்டார்கள். கீர்த்தனம் பாடுகிறவர் என்றே சொல்வார்கள் முன்பு வித்வான்களுக்கு இப்பொழுது போல் ஏராளமான கீர்த்தனங்கள், உருப்படி வகைகள், பாடம் உண்டு என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் ஒவ்வொரு கச்சேரியிலும் உருப்படி மாற்றிப் பாடுவார்கள். இப்பொழுது வித விதமான உருப்படி வகைகள் வித்வான்களுக்கு ஏராளமாகப் பாடம். முன்பு வித்வான்கள் ஒரு உருப்படியை இன்று பாடும்போது கேட்பது போல் மறுதினம் பாடும்போது இருக்காது. ஆனால் சிட்டை மாறாது. பாவமும் ரூபமும் மாறும். மனதிற்குப் புதிதாய் கற்பனை தோன்றினால் அதை சேர்த்துப் பாடி விடுவார்கள். முன்பு அவர்கள் கச்சேரி செய்யும்போது நன்றாய் வாய்த்துக் கொண்டு பாடினால் நாம சுமார் 1 மணி நேரம் தான் பாட்டைத் தொடர முடியும். பிற்பாடு நாம் மெய்மறந்து உட்கார்ந்து இருக்க வேண்டியது தான்.

கச்சேரியில் அதைப்பாடு இதைப்பாடு என்று ஒருவரும் துணிந்து கேட்க மாட்டார்கள். அப்படி ஏதாவது பாடிக் கேட்க வேண்டுமென்றால் வித்வானுக்கு ஆத்மார்த்தமாக உள்ளவர்களிடத்தில் காதோடு ரகஸ்யமாகச் சொல்லிப் பாடச் சொல்லுவார்கள். முன்பு Mike இல்லாத காலமானதால் கச்சேரியின் போது எவரும் முணுமுணுத்துக்கூட பேசமாட்டார்கள். Mike இல்லாததால் பாடுவது காதில் விழுவதற்காக மிக சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் ரஸிகர்கள் பாட்டைக் கேட்பார்கள். பாட்டு நன்றாய் அமைந்தால் வெகுநாள் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கும். முன்பு பலர் வித்யை அப்பியாசம் பண்ணி இருந்தாலும் பாடுகிறவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. நகரங்களில் கச்சேரி நடக்கும்போது இப்பொழுது உள்ளது போல் கச்சேரியைப்பற்றி பிரசுரம் பண்ணமாட்டார்கள். ரஸிகர்களாக நிறைய கூடுவார்கள். இப்பொழுது பிரசுரங்கள் அதிகம்; பாடுகிற வித்வான்களும் அதிகம். ஆதரிப்பவர்களும் அதிகம். ஸங்கீதம் ரொம்பவும் விரிவடைந்திருக்கிறது. மிகவும் பரவி இருக்கிறது. இதற்கு ஸாதனங்கள் பலவோடு Radio ஒரு முக்கிய ஸாதனமாகும். முன்பு கச்சேரி என்றால் வர்ணம் சில சமயம் வர்ணமில்லாமலும் இருக்கும். 5, 6, கீர்த்தனங்கள், பிறகு ராக விஸ்தாரம், பல்லவி, நிரவல், ஸ்வரம், ராகமாலிகை, ச்லோகமாகவோ, தமிழில் விருத்தமோ பாடி ஒரு ஜாவளி, ஒரு தில்லானா ஏதாவது இரண்டொரு தமிழ் பாட்டுக்கள், காவடிச்சிந்து, திருப்புகழ் முதலியவைகளைப் பாடி மங்களம் பாடுவார்கள் முன்பைவிட இப்பொழுது விதவிதமான உருப்படிகள் கச்சேரிகளில் ஏராளமாகப் பாடப்படுகின்றன உருப்படிப்ரதான்யம் தற்காலம் அதிகம். முன்காலத்தில் ஊருக்கு ஊர் நாலைந்து ரஸிகர்கள் இருப்பார்கள். கச்சேரிகளில் முதல் ஸ்தானம் அவர்களுக்குத்தான். ரஸிகர்களாக இருக்கும் மற்றவர்கள் சற்று எட்டி உட்கார்ந்து இருப்பார்கள். இந்த ரஸிகர்கள் ரஸிப்பதைப் பார்த்து மற்றவர்களும் சந்தோஷப்படுவார்கள். இந்த ரஸிகர்கள் வாயைத் திறந்து திருப்திகரமாகச் சொன்னால்தான் பாக்கி உள்ளவர்கள் பிரமிப்பார்கள்.

இருந்தாலும் இந்த ரஸிகர்களை எதிர்பார்க்காமலேயே கச்சேரி அபாரமாய் அமையும் காலத்தில் ஸர்வ ஜனங்களும் ஒருவரை ஒருவர் எதிர்பார்க்காமல் ஆரவாரம் பண்ணி சந்தோஷப்படுவார்கள். மேல் நாட்டு நாகரீகத்தை அனுசரித்து கச்சேரிகளில் தற்காலம் கரகோஷம் செய்வது போல் முன்பு கிடையாது.

முன்பு கச்சேரியில் உட்கார்ந்து கேட்கும்போது அடுத்தது என்ன பாடப் போகிறாரோ என்று நம்மை எதிர்பார்க்க வைத்துப் பாடுவார்கள். நாம் கேட்காத உருப்படிகளும் வரும். இக்காலத்தில் பாடப்போவதை எல்லாம் எதிர்பார்க்க வைக்காமல் முன்பே தெரிவித்து விடுகிறார்கள். ஏற்கனவே வித்வான்கள் புருஷர்கள் 2½ கட்டையிலிருந்து 4½—5 கட்டைவரை உத்தேசமாக Dக்கு மேலும் G வரையிலும் உள்ள சுருதியில் பாடிவந்தார்கள். கணீர் என்று 500 லிருந்து 1000 ஜனங்கள் வரை காதில் விழும். இப்பொழுது Cக்கு மேலேயே சில வித்வான்கள் பாடுகிறார்கள் என்று தெரிகிறது. பொதுவாகவே இப்பொழுது ஆதாரச்ருதி குறைவாகவே இருப்பதாக அறிகிறேன். இதற்குக் காரணம் என்ன வென்று சொல்ல முடியவில்லை. விடாமல் கச்சேரி செய்து கொண்டே இருந்தால் சாரீரம் களைத்து ஆதாரச்ருதி கொஞ்சம் இறங்கக்கூடும். ஆனாலும் 1 கட்டைக்கும் கீழ்போய்விடாது. மறுபடியும் 10 நாள் பாடாமல் இருந்தால் பழைய ஆதாரச்ருதிக்கு வந்துவிடும். வயதாக வயதாக ஆதாரச்ருதி சிறிது குறையும். ஆனால் இயற்கையை மீறி அதிகம் குறைய இடமில்லை. மற்றொரு காரணம் இக்காலத்தில் உள்ள Mike என்றும் சொல்லத் தோன்றுகிறது. Mike இருக்கிறதே என்று நினைத்து ச்ருதியை குறைத்துவைத்துக்கொண்டு பொய்க்குரலில் பாடினாலும் காதில் விழுகிறதல்லவா? துர்ப்பழக்கத்தினால் சாரீரத்தின் ஆதாரச்ருதி குறையும். ஆக இந்த தலைமுறையில் தற்பொழுது ஆதாரச்ருதி இறங்கி இருப்பதற்குக் காரணங்கள் பல இருக்கலாம்.

இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்லமுடியவில்லை. முன்பு ஜனங்களுக்கு ருசியை உண்டுபண்ணுவதும் ருசியை மாற்றுவதும் வித்வான்கள் கையில் இருந்தது அவர்கள் வித்தைக்கு பயந்து வித்தையையே பொருட்படுத்திப் பாடினார்கள். இத்தலைமுறையில் கேட்போருடைய ருசிக்கேற்ப கச்சேரி செய்கிறவர்கள் பாடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதோடு 1920ம் வருஷத்துக்கு முன்பு கச்சேரிகளில் பல்லவி பாடுவதில், அனுலோமம் விலோமம் இஷ்டமிருந்தால் பாடுவார்கள். ஆனால் லக்ஷணத்தையும் ஸம்பிரதாயத்தையும் ஒட்டி பல்லவி 'த்ரிகாலம்' அவச்யம் பாடுவார்கள். ம்ருதங்கத்தில் வாசிக்கும் கோர்வை போல பாட்டில் பாடமாட்டார்கள். இப்பொழுது பலர் விசேஷமாக மிருதங்கக் கோர்வையை ஸ்வரம் பாடுவதில் உபயோகிக்கிறார்கள். பல்லவி பாடியவுடன் கங்கணம் கட்டிக்கொண்டு அனுலோம விலோமத்தை பாடுகிறார்களே ஒழிய பல்லவி 'த்ரிகாலம்' பாடுவது மறைந்து வருகிறது.

ஸங்கீதத்தின் லக்ஷிய லக்ஷணம் அன்றும் இன்றும் என்றும் ஒன்றேதான். ஆனால் பாடும்வழியும் முறையும்தான் மாறிக்கொண்டு வரக்கூடும்.*

* Courtesy: A. I. R. Madras.

மிருதங்கம் வாசிக்கும் முறை

வித்வான் திண்ணியம் ஸ்ரீ வெங்கட்ராமய்யர்

ஸம்ஸ்கிருதத்தில் சம்பூ என்பது ஒரு காவியம். அது கத்யம், பத்யம் இரண்டும் கலந்து வரும் காவியம். கத்யம் என்றால் உரை நடை. பத்யம் என்றால் செய்யுள். கத்யத்தோடு கூடிய பத்யம் மிகவும் சுவை தரும் என்பதை ஒரு பெரிய கவிஞர் உவமை யொன்றைக்காட்டி விளக்கியுள்ளார். அதாவது பாட்டு இனியது. அது பக்க வாத்யங்களுடன் சேர்ந்துவிடின் மிக மிக இனியது ஆகும். அதுபோல சுலோகம் இனியது. அது கத்யத்துடன் கூடினால் மிகவும் இன்பம் பயக்கும் என்பதாகும்.

பக்க வாத்யங்களில் சுருதிவாத்யம், தாளவாத்யம் என்று இருவகையுண்டு. சுருதி வாத்தியம் பிடில், தம்பூரா முதலியவை. தாள வாத்யம் மிருதங்கம், கஞ்சீரா போன்றவை. இவற்றுள் மிருதங்கம் மிக முக்கியமானது. ஏனெனில் எந்தப் பாட்டுக் கச்சேரியும் மிருதங்கமின்றி நடைபெறாது. தனி வாத்யக் கச்சேரிகளிலும் மிருதங்கம் போன்றவை இன்றியமையாதவை. ஏனைய பக்க வாத்யங்களின்றி மிருதங்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு பாட்டை சோபையுடன் விளங்கச் செய்ய முடியும். ஸங்கீதத் தொடர்பு கொண்ட எந்த நிகழ்ச்சியிலும் மிருதங்கம் போன்ற தாள வாத்யம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. எனவே மிருதங்கத்தின் முக்கியத்தன்மையை இதனால் ஒருவாறு உணரலாம்.

மிருதங்கம் என்பது நம் முன்னோர்களின் அபூர்வமான கண்டுபிடிப்பாகும். அது தாள வாத்யமாயும் விளங்குகிறது. சுருதி வாத்யமாயும் விளங்குகிறது. நல்ல சுநாதத்தை எழுப்ப அது மார்ஜனையைப் பெற்றிருக்கிறது. அது மிருதங்கத்தின் வலப்புறத்தில் கரியவடிவுடன் அமைந்திருக்கும். அது தான் மிருதங்கத்தின் நாதஜீவன். அதற்கு மண் என்று பெயர். ம்ருத் என்ற சொல் மண்ணைக் குறிக்கும் எனவே ம்ருத்+அங்கம் மிருதங்கம், ம்ருத்தை முக்கிய உறுப்பாகக்கொண்டு விளங்குவது என்பது இத்தொடரின் பொருள். இது மற்ற வாத்யங்களுக்கு இல்லாமல் இதற்கு மட்டுமுள்ள தனிச் சிறப்பாகும்.

இந்த மிருதங்கத்தில் வல்லவர்களாகப் பலர் தொன்று தொட்டுத் தென்னிந்தியாவில் விளங்கி வருகின்றனர். தாளக் கலையே தென்னிந்தியாவைத் தவிர மற்ற விடங்களில் அதிக நுட்பச் சிறப்புடன் விளங்கவில்லை எனலாம். மிருதங்கத்தை நன்றாக வாசித்துப் பெயரெடுக்க வேண்டுமானால் அதற்குச் சில பயிற்சி முறைகளுண்டு. இளைஞர்கள் நன்குணரவேண்டும்.

முதன் முதலில் மிருதங்கத்தை ஊனமின்றி நன்கமைத்துக் கொள்ள வேண்டும் அதில் மீட்டு, சாப்பு ஆகியவற்றை சுருதி சுத்தமாக அமைத்துக் கொண்டு அதற்கேற்றபடி தொப்பியையும் கீழ்ஸ்தாயி சுருதிக்கும் பொருத்தமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இடது புறமும், வலது புறமும் ஒத்த ஸ்தாயிபேத சுருதிகளுடனிருந்தால்தான் நாதம் நன்றாயமையும்.

பிறகு அதில் நல்ல முறையில் சுத்தமான காலப்ரமாணத்தை வைத்து அப்பியாஸம் செய்யவேண்டும். முன்னோர்கள் ஆரம்ப பாடங்களையெல்லாம் ஆறு காலங்களில் ஸாதகம் செய்தனர். இந்த விதமான ஸாதக முறையே சிறந்தது. இதனால் காலப்ரமாணமும், கையும் சுத்தமடையும். எந்த விதமான பாட்டுக்கும் ஒத்தவாறு வாசிக்கும் திறமை ஏற்படும். ஸங்கீத வித்வான்கள் யாவரும் ஒரு கீர்த்தனத்தை ஒரே வகையான காலப்ரமாணத்தில் அமைத்துப் பாட மாட்டார்கள். தங்களுடைய குரல்பலத்திற்கு ஏற்றவகையில் கீர்த்தனைகளைப் பாடுவார்கள். ஒருவர் வேகமாகப் பாடும் கீர்த்தனைகளை இன்னொருவர் இழுத்துப் பாடுவார். அப்போது காலப்ரமாணம் வேறுபடும். எந்தவிதமான காலப்ரமாணத்திற்கும் ஏற்ற வகையில் வாசிக்கவேண்டுமானால் அதற்கு சாஸ்திரீயமான ஆறுகாலப்பயிற்சி முறையே உதவும். முன்னோர் இதையே கையாண்டனர்.

தற்போது இவ்வகையான பயிற்சி அருகிவருகிறது. அதனால்தான் சில ஸங்கீத வித்வான்கள் குறிப்பிட்ட சிலர்தாம் தமக்கு மிருதங்க வாத்யம் வாசிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். எல்லா வித்வான்களும், எல்லாப்பக்க வாத்யக்காரர்களையும் விரும்புவதும், எல்லாப் பக்க வாத்யக்காரர்களும் எல்லா வித வித்வான்களுக்கும் ஈடு கொடுப்பதும் எப்பொழுது ஏற்படுமோ அப்போது தான் கலை அபிவிருத்தியடைந்துள்ளது என்று சொல்லுவது பொருந்தும். இந்த நிலைக்கு சாஸ்திரீயமான பயிற்சி தேவை.

பாடும் வித்வான்களுக்கு மிருதங்கம் வாசிப்பவர்கள் கீழ்வரும் சில விஷயங்களை நன்றாக அறிந்திருக்கவேண்டும். முதலில் தன்னை ஒரு பக்க வாத்யக்காரன் என்று எண்ணவேண்டும். பாட்டின் அழகைப் பெருக்குவதே தன் கடமை என அறியவேண்டும். எப்போதும் மிருதங்கத்திலிருந்து கார்வையுடன் கூடிய நாதம் எழும்புமாறு வாசிக்கவேண்டியது மிக முக்கியமானது. தொப்பியை ஏற்ற இடத்தில் அழகான கமக நாதத்துடன் கையாள வேண்டும். தொப்பியின் ஒலி மீட்டுநாதத்தை அழித்து விடும்படி இருத்தல் கூடாது. பாட்டில் கார்வை வரும் நேரங்களில் சதுரச்ர லகுநடையை நல்ல நாதத்துடன் மீட்டில் கொடுத்தால் கேட்பவர்களுக்கு மிக ஆனந்தம் ஏற்படும்.

தீர்மானங்களையும், கோர்வைகளையும் இடமறிந்து உபயோகிக்க வேண்டும் கால், அரை, முக்கால் இட எடுப்புக்களில் கீர்த்தனைகள் அமைந்திருக்கும் அப்போது பாடுகிறவர்களுக்கு இடைஞ்சல் தராதபடி விதவிதமான சொற்கட்டுகளை சதுரச்ர லகுநடை பிறழாதபடி வெளியிடவேண்டும். அடிக்கடி தட்டிற்குத் தட்டு ஆரம்பச்சொல் வரும்படி பலவகையான சொற்களைக்கற்பனையுடன் வாசித்தால் பாட்டுப்பாடுபவர்கள் தம்மையறியாமலேயே பேஷ், சபாஷ் என்று வியந்து கொள்வார்கள். பாட்டிற்கு நடுவில் எக்காரணத்தை முன்னிட்டும் நடையை மாற்றி வாசிப்பதோ, உதறி, உதறி. காலிடத்தில் வாசிப்பதோ பாடகருக்கு வெறுப்பைத்தரும். அதனால் பாட்டின் அழகே கெடும்.

பாடகர் ஒரு கீர்த்தனையைப் பாடத்தொடக்கியவுடனேயே மிருதங்கத்தை வாசிக்கத் தொடங்குதல் சரியன்று. பாடகரின் காலப் பிரமாணத்தைத் தன் ஒற்றைவிரல் டேக்காவினால் நன்கறிந்த பின்பே நன்கு வாசிக்கத் தொடங்க

வேண்டும். பாடுபவரைத் தன் காலப்ரமாணத்திற்கு இழுத்து வருவது தகாது. அவருடைய காலப்ரமாணத்திற்குத்தான் போகவேண்டும். பாட்டு முடிந்தவுடன் ஒரு தாள ஆவர்த்தனமோ, இரு தாள ஆவர்த்தனமோ அமையும்படி கலகலவென்று நாதக்கட்டுடன் இடக்கான கார்வையின்றி தீர்மானம் வைப்பது நல்லது.

கீர்த்தனங்களில் பல்லவிக்கு என்றும் அனுபல்லவிக்கு சரணத்திற்கு என்றும் தனித்தனி வாசிப்பு முறையில் பலவகைச் சொற்களைக் கையாள வேண்டும். ஒரே மாதிரியாக எல்லாவற்றிற்கும் வாசிப்பது சோர்வை உண்டாக்கும். இதை அனுபவத்தால்தான் பெறமுடியும்.

தனியாவர்த்தனத்தின் போது தன் திறமைகளையெல்லாம் வெளிக்காட்டலாம். ஏனைய சமயத்தில் பாட்டை அழகுபடுத்துவதில் கவனமிருக்கவேண்டும். கணீரென்ற நாதக்கட்டுடன் வாசிக்க வேண்டுமென்பதை ஒரு போதும் மறக்கக்கூடாது.

மேலே கூறியவற்றை மனத்திற்கொண்டு அப்யாசம் செய்துவந்தால் நிச்சயமான அறிவும், அனுபவமும் ஏற்பட்டு, பிறகு பல்லவிக்கு வாசிப்பது தானாகவே வந்துவிடும். அவ்வப்போது பல்லவிக்கு வாசிக்கும் முறையைப் பெரிய வித்வான்களிடம் கேட்டறிந்து சீர்படுத்திக்கொள்வது இளைஞர்களின் கடமை.

சென்னை வித்வத் ஸபை 45-வது மகாநாடு

தலைவர் வித்வான் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் தலைமை உரை

கவர்னர் ஸ்ரீ ஷா அவர்களே! ஸங்கீத வித்வத் ஸபைத் தலைவர் அவர்களே! நிர்வாஹ அங்கத்தினர்களே, கௌரவக் காரியதரிசிகள் அவர்களே! இங்கு கூடியிருக்கும் சகோதர சகோதரிகளே!

என்னை ஆட்கொண்ட இறைவன் இசைந்தளித்த இசை என்னை எப்படியெல்லாம் ஈர்த்தது என்று சிறிது சொல்ல நினைக்கிறேன்.

தன்னிச்சையாய்த் திரிந்த என்னை ராக தாளம் என்றால் என்ன என்று கற்பித்து ருசிகாட்டிய பெரியோர்களை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

திருவனந்தபுரம் கிருஷ்ண பாகவதர், கீழ்வேளூர் ராமச்சந்த்ரய்யர், மஞ்சக்குடி தேவராஜய்யர், பழையவலம் ஸுப்பய்யர், மூங்கில்குடி கண்ணுசாமி ஐயர் முதலானோர் என் வாழ்க்கைப் பயணத்தில் முதல் பாதையைக் காட்டியோர் எனலாம்.

அன்பர்கள் அளித்த ஊக்கத்தாலும் அவர்கள் காட்டிய ஆர்வத்தாலும் கச்சேரிகளும், செய்தேன். இப்போதும் கச்சேரி என்று உட்கார்ந்து எழுதுகிறேன். முதன் முதலில் திருவையாற்றில் தியாகப்ருஹ்மத்தின் எதிரில் உத்ஸவத்தில் பிடில் மஹாவித்வான் ஸ்ரீ கோவிந்தஸாமி பிள்ளை அவர்கள் செல்ல, பாப்பா வெங்கட்ராமய்யரும், தஞ்சாவூர் வைத்யநாதய்யரும் பக்கத்துணையாய் அமர ஒரு காலை 9 மணி தொடங்கி 12 மணி வரை வித்வான்கள் நிறைந்த ஸபையில் பாடினேன்.

தொடர்ந்து பற்பல இடங்களிலும் கச்சேரிகள் பாடினாலும் என்மனம் இறைவனைத் தொடர்ந்து அவனது அழகைப் பருகி அருளைப் பெற்றுப் பாடிப் பணியவே ஆர்வம் கொண்டது "தெருவு தோரலறி" என்ற மணிவாசகப் பெருமானின் அருள்வாக்கு என்னை அழைத்தது.

இதற்கு மூலகாரணம் திருவனந்தபுரம் நீலகண்ட தாஸர் அவர்களைத் தரிசித்து. இரவு பகல் ஸதாசிவ பஜனை செய்வதில் இளமைப்பருவ முதலே கலந்திருந்ததே.

இறைவன் பேரருள் என் இதயத்தில் நிறைந்து நான் பெற்ற இன்பத்தை, என் உணர்ச்சியை, இறைவனின் அழகை, வாயாற் சொல்லிப் பாமாலை புனைந்து பாடத்தூண்டியது.

"உன்னைத் துதிக்க அருள்தா" என்று மனமுருகி அம்மையப்பனைப் பார்த்து மனம் நினைத்ததை வாய் புலம்ப அது ராகமும் தாளமும் கொண்டு பாடலாய்ப் பிறந்தது. இதுவே என் முதற்பாடல். இவ்வாறே உள்ளுணர்ச்சி

தூண்ட என்னையறியாது பாடல் புனையலானேன். இதொன்றும் என்செயலல்ல. என்னுள்ளே மறைந்து நிறைந்து செயலாற்றும் என் ஆண்டவனின் செயலே யாகும்.

இப்பாடல்களைப் பாடவென்றே பல சோதனைகளையும் அனுபவங்களையும் தந்து பாடலாக அவற்றை வெளிப்படுத்தினன். அவன் பேரருளால் பாடல்களை நான் இயற்றச் செய்து, என் வாழ்நாளிலேயே அவற்றை அனைவரும் விரும்பிப் பாடிக் கேட்கும் இன்பத்தையும் எனக்கு இறைவன் தந்திருப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

சினிமாவில் புகுத்தினன், கலையின் பல துறைகளைக் காணவைத்தான். செல்வத்தைக் கொடுத்தான், பறித்தான். வறுமையில் வாடவைத்தான். நோயின் பிடியில் சிக்க வைத்தான். இவற்றின் மூலம் என்னைப் பாடு, பாடு என்று தூண்டினன். யார் யார் மூலமோ உதவி செய்தான்; பதவி தந்தான்; பெருமை தந்தான். நான் பெற்ற ஒவ்வொரு பேறும் அவன் அருளே!

பாடல் என்றால் என்னவென்றோ, கச்சேரி என்றால் என்னவென்றோ அறியாத நான் தமிழும் அறியாதவன். இலக்கண இலக்கியமோ, ஸங்கீத சாஸ்த்ரமோ தெரியாத என்னை பாடலாசிரியனாக்கிய அவன் கருணையே கருணை!

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரும்மம், ஸ்ரீதீக்ஷிதர், ஸ்ரீச்யாமா சாஸ்திரி முதலான மும்மூர்த்திகளின் பாடலின் மேன்மை அறியாமலே இருந்தவன் நான். சிறுவயதில் ஒருமுறை ஸ்ரீ கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யரின் கச்சேரியினிடையில் "இது என்ன பாட்டு" என எண்ணி வெளியேறி யிருக்கிறேன். பிறகு நான் ஸங்கீத மும்மூர்த்தியின் மேன்மையை அறியும் பக்குவம் பெற்றேன். அந்த இசை அமுதைப் பருகிப் பருகி அதன் உயர்வினை அறிந்தேன். அவருடைய பாட்டே என்னை காந்தம் ஊசியைக் கவர்வதுபோல் லயிக்கச் செய்தது. யாருடைய கானத்தை "இது என்ன பாட்டு" என எண்ணி வெளியேறினேனோ அந்தக் கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யரவர்களையே இன்றளவும் என் முதல் குருவாக மதித்து வணங்கி வருகிறேன். எந்தப் பாடல்களைப் புரிந்து கொள்ளாமலிருந்தேனோ, அப்பாடல்களை ஆக்கிய ஸ்ரீ த்யாகப்ரும்மம், ஸ்ரீ தீக்ஷிதர், ஸ்ரீ ச்யாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரையுமே ஸங்கீத மூல குருக்களாக வழிபடுகிறேன். இப்போதும் என் சொந்த ஸாஹித்யங்களைப் பாடுவதைவிட அம்மஹான்களின் பாடல்களைப் பாடுவதே எனக்குப் பேரின்பமாகிறது. அம்மஹான்கள் போட்ட ஸங்கீத ராஜபாட்டையில் பயணஞ் செய்யும் பல கோடிப் பயணிகளில் நானும் இறைவனருளால் சிறு பணி செய்திருப்பதாகவே கருதுகிறேன். எனது இந்தச் சிறு இசைத் தொண்டைப் பாராட்டி என்னை உயர்த்திய அனைவருக்கும் என் அன்பு.

வயதில் பெரியவன் என்ற முறையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

எந்த வித்தைக்கும், சிறப்பாக ஸங்கீதத்திற்கும் சில சத்ருக்கள் உண்டு. முதலாவது ஏதோ பிரமாதமாய் தெரிந்துகொண்டு விட்டதாக அஹம்பாவம் கொள்வதும் தான் அறிந்து கொண்டது அபாரம் என்று த்ருப்தி கொள்வதும், இரண்டாவது பிறரைக் குற்றங்கூறி சொல்லி தூஷிப்பது. இந்த இரு குறை

கள் மறைந்தால் கூடவே ஸங்கீதத்தின் தரம் உயர்ந்துவிடும். இந்நாளில் நம நாடு முழுதும் கர்நாடக ஸங்கீதம் நிறைந்து பரவியிருக்கிறது. நூற்றில் ஒன்றிரண்டு சோடையாய்ப் போனாலும் அநேகமாய் அனைவரும் நல்ல இனிய சாரீரத்துடன் சிறப்பாகவே பாடுகின்றனர்.

தற்காலம் ஸங்கீதம் தொழிலாய்ப் போய்விட்டது. ஸம்பாத்யத்திற்கு ஒரு ஸாதனமாகி விட்டது ஈசுவரார்ப்பணம் என்பது மறைந்துவிட்டது. அதனால் குரு பக்தி குறைந்துவிட்டது. நம் ஸங்கீதத்திற்கு நிச்சயம் குரு பக்தியும் இறை அன்புமே எரு என்பேன் முன் காலத்தில் நடைமுறையிலிருந்த குருகுல வாசம் தற்போது அரிதாகிவிட்டது. தக்க குருவும் இல்லை, சீடரும் இல்லை, ஒருவருக்கும் பொறுமையுமில்லை.

நம் அகாடமியைப் போன்ற கலைஸ்தாபனங்கள் ஓரளவு அக்குறையை நிவர்த்தி செய்கின்றன. தக்க ஆசிரியர்களைக் கொண்டு ஸங்கீதக்கலை, நாட்டியக் கலை ஆகியவை சிறப்புற அகாடமியில் கற்பிக்கப் படுகிறது.

இன்னும் இசை ஆராய்ச்சிகள் மூலம் பல அரிய விஷயங்களை நமது அகாடமி விளக்கியுள்ளது. அரிய நூல்களை அச்சிட்டிருக்கிறது. போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கி, இசையை வளர்த்திருக்கிறது இளைய வித்வான் முதல முதல்தர வித்வான்வரை வீணை, வேணு, நாட்ய, நாடக பாட்டுக்கச்சேரிகளை நிகழ்த்தி இசையை வளர்த்து அருங்கலை வளரச் செய்ய அகாடமி உதவியிருக்கிறது. இன்னும் இதன் சேவைகள் அளவிடற்பாலனவன்று. இந்த அகாடமி மேன்மேலும் சிறந்து வளர இறைவன் அருள்புரிக! நிர்வாகத்தின் நலம் ஓங்குக!

மீண்டும் அனைவருக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

வணக்கம்

நன்றி

ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதரின்

ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சினி

THE SANGITA SAMPRADAYA PRADARSINI

OF

Sri Subbarama Dikshitar

TAMIL SCRIPT EDITION

தமிழ் லிபியில் புதுப்பதிப்பு

Written in Tamil by Vidwans **B. Rajam Iyer** and **S. Ramanathan** under the supervision of Sangita Kalanidhis **T. L. Venkatarama Iyer and Mudicondan C. Venkatarama Iyer** and **Dr. V. Raghavan**

sponsored by

THE CENTRAL SANGEET NATAK AKADEMY

published by

THE MADRAS MUSIC ACADEMY

Vols I, II, III	Pages 750	Rs. 6 each
பாகங்கள் 1, 2, 3	பக்கங்கள் 750	பாகம் ஒன்று ரூ. 6

Whole set of 4 Volumes

Pre-Publication Price Rs. 20

Prof. R. Srinivasan says: "The Sangita Sampradaya Pradarsini is a veritable encyclopaedia............This Publication will bring joy to the hearts of many.

—*The Hindu*

THE MUSIC ACADEMY, MADRAS

DISTINGUISHED PERSONS WHO OPENED THE ANNUAL CONFERENCES

VIDVAN-PRESIDENTS & SADAS-PRESIDENTS

1929 The Zamindar of Seithur
1930 Her Highness the Junior Maharani of Travancore
1931 Sir C. P. Ramaswamy Iyer, K C. I. E.
1932 The Hon. Dr. Raja Sri S. R. M. Annamalai Chettiar, Raja of Chettinad
1933 Dr. Sir C. V Raman, M. A., Ph. D., F.R S , N L.
1934 Raja Sir M. A. Muthia Chettiar
1935 The Rt. Hon. V. S Srinivasa Sastri, P.C., C.H, LL., D.
1936 Sir P. S. Sivaswamy Iyer, K.C.S.I.
1937 Hon. Sri C. Rajagopalachari
1938 His Highness the Yuvaraj of Mysore, G.C.I.F.
1939 Sir R. K. Shanmukham Chettiar K C I.E.
1940 His Highness the Maharaja of Travancore, G.C.I.E., D. Litt.
1941 Maharaja of Pithapuram
1942 Sir M. Venkatasubba Rao, K.C.I.E.
1943 Dr. Sir S. Radhakrishnan
1944 Dr. R.M. Alagappa Chettiar
1945 The Rajah of Ramnad
1946 Dr. U. Rama Rao
1947 The Raja of Sivaganga
1948 H. E. The Maharaja of Bhavanagar, Governor of Madras
1949 Hon Sri P. S. Kumaraswamy Raja, Premier of Madras
1950 Her Highness the Maharani of Bhavanagar
1951 Sri T. R. Venkatarama Sastri
1952 H. E. Sri Sri Prakasa, Governor of Madras
1953 Dr. B. V. Keskar
1954 Hon. Sri T. T. Krishanamachari
1955 Dr. C. D. Deshmukh
1956 Sri Morarji Desai
1957 H. H. The Maharaja of Mysore
1958 H. E. Sri Bishnuram Medhi, Governor of Madras
1959 Sri Humayun Kabir, Minister for Scientific Research and Cultural Affairs
1960 Dr. P. V. Rajamannar
1961 Sri V. T. Krishnamachariar
1962 Hon. Sri M Bhaktavatsalam
1963 Hon. Sri K Kamaraj
1964 Sri G. D. Birla
1965 Hon. Sri R. Venkataraman
1966 H. E. Sardar Ujjal Singh
1967 Dr. B. Gopala Reddi
1968 Maharani Setu Parvati Bai
1969 T. S. Rajam
1970 H. E. V. Visvanatham

THE MUSIC ACADEMY, MADRAS

OFFICE BEARERS 1970-71

President :

Sri T. S. Rajam

Vice-Presidents :

Sangita Kalanidhi Sri Musiri Subramanya Iyer
Sri T. T. Krishnamachari
Sri M. Sudarsanam Iyengar
Janab Basheer Ahmed Sayeed
Sri T. S. Rajam
Sri V. S. Tyagaraja Mudaliar
Sri G. Narasimhan
Sri R. Venkataswamy Naidu
Sri K. R. Sundaram Iyer
Prof. P. Sambamurthy

Board of Trustees :

Sri T. S. Rajam *Chairman (Ex-Officio)*
Sri G. Narasimhan *(Convener)*
Sri K. R. Sundaram Iyer
Sri T. V. Viswanatha Iyer
Sri T. Sadasivam
Sri V. K. Ramaswami Mudaliar
Sri V. D. Swami
The Secretaries *(Ex-Officio)*

Secretaries :

Dr. V. Raghavan
Sri T. V. Rajagopalan
Sri R. Ranganathan
Sri S. Natarajan

Other Members of the Executive Committee :

Sri K. Chandrasekharan
Sri P. S. Ramachandran
Sri R. Eswaran
Sri K. S. Vaidyanathan
Sri T. S. Rangarajan
Sri V. Panchapakesan
Smt. Indira Ramadurai
Sri M. R. Narayanaswamy
Sri K. Vaideeswaran
Sri M. Shanmugam
Sri K. Hariharan
Sri R. Santhanam

Auditors :

Messrs. P. S. Subramanya Iyer & Co., Madras-1

26

PRESIDENTS OF THE ANNUAL EXPERTS' CONFERENCES

1929 Sri T. V. Subba Rao, Vidvan T. S. Sabhesa Iyer and Sri M. S. Ramaswami Iyer
1940 Gayakasiakhamani Harikesanallur Muthia Bhagavatar and Sri T. V Subba Rao
1931 Gayaka Siromani Swaminatha Iyer of Pazhamaheri
1932 Vidvan Tiger K. Varadachariar
1933 ,, K. Ponnayya Pillai
1934 ,, T. S. Sabhesa Iyer
1935 ,, Sangita Sastra Ratna K. Vasudevachar
1936 ,, Swaminatha Iyer of Umayalpuram
1937 Brahmasri Chidambara Bhagavatar of Agara Mangudi
1938 Gayakasikhamani Ariyakudi Ramanuja Iyengar
1939 Vidvan Musiri Subramanya Iyer
1940 ,, Vedanta Bhagavatar of Kallidaikurichi
1941 Prof. D. Venkataswami Naidu
1942 Vidvan Subbarama Bhagavatar of Mazhavarayanendal
1943 ,, Palladam Sanjiva Rao
1944 Sri T. L. Venkatarama Iyer
1945 Vidvan Maharajapuram Visvanatha Iyer
1947 Rajasevanirata Semmangudi Srinivasa Iyer
